உ
சிவமயம்



அமரர் திருமதி ஐயம்பிள்ளை சின்னப்பிள்ளை

அவர்கள் தம் அருள் தரு

நினைவஞ்சலி

31ம் நாள் இராகமாலை

31.01.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அமரர் திருமதி

# ஐயம்பிள்ளை சின்னப்பிள்ளை

## அவர்கள் தம் அருள் தரு நினைவஞ்சலி

# இராகமாலை

## 31ம் நாள் நினைவு மலர்

## 31.01.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பெயர்நிலை பூவுலக வாழ்வின் இல்லறந்தனில்
துயர் அறியா தூய வேளாண் குடிப்பெற்றோர் தமக்கு ஏய நல்வழி காட்டிடு
திருமளெனவந்த எம் தாயே கொண்டிருகுலம் தழைக்கவென கூறிடு
நல்லறமாம் இல்லறம் தனில்
பண்புறு பரம்பரையில் வந்திட்ட எம்கோமான் பிதாதனை அணைந்தே
கண்ணில் அருள்பெருக வழிபட்ட கஜமுகனாம் விநாயகனருளால்
திண்ணமான மனமுடைத்தூய பண்பாளன் எம்பிதாவுடன் கூடி மகிழ்ந்தே
பெண்மையின் இலக்கணமாய் வாழ்வு கண்மே எமை ஈன்றெடுத்தே
இன்பமுடன் இப்புவிமெச்ச சீராட்டிப் பாராட்டி அறிவு தந்தேவாழ வைத்தாய்
துன்பமில்லா வாழ்வுகாண தூய வாழ்வு தேடித்தந்தே
அன்பினில் அகம் மகிழ்ந்தே வாழ்ந்த காலை நன்மை காண் நலம் வாழ
நனிவுறு மணவாழ்வு எமக்களித்தே அன்பான பேரர் பேர்த்தியரைக்
கண்டே மகிழ்ந்தே நீயிருந்த காலை செல்வத்துட் செல்வம் பொருட் செல்வம்
தேட எமை எட்டவே அனுப்பியே வாழ்காலை நல்மனமுடை நம்பனாம்
எம்பிதாவும் நாளிலும் பொழுதிலும் உனைப்பிரியாதிருந்தே சொல்லிய
சுகங்கள் எல்லாம் உன்னைக் காணவைத்தார்
எல்லையில்லா ஆனந்தமுடன் எம் இதயமும் இன்புற்றே மகிழ்ந்தகாலை
இல்வாழ்வில் நீ கண்ட பயன் இனிதே முடிக்க எண்ணிய காலனவனும்
தொல்லை நிறைதுயர் நிறை விதி வசத்தின் விளைவு காண வைக்க நல்ல
உள்ளம் நிறை நனி சிறப்புக்கண்ட உன்தனைக் கவர்ந்ததாலே
அல்லல்கொண்டே அப்பா அலமலந்து ஏங்க அவர் நிலை கண்டே நாமும்
சொல்லில் அடங்காத் துயர்தனை இதயம் நிறைக்க பொற்புறு மாதாவாம்
உனை நினைத்தே எம் வாழ்நாள் தோறும்
வற்றாத கண்ணீருடன் வாழ்ந்துமே நினைத்திருப்போம்
கற்புறு அன்னையும் காலன்வழி சென்றதனால் கலக்கமுற்றே நாமும்
தற்பெருமையில்லா தகவுடைமாதாவை நினைந்தே சிற்பரன் பாதம் நாடி
சீரிய அருள் வேண்டியே மற்றவர் மனம் நிறை மாதாவின் பாதக்கமலத்தில்
எம் நினைவு கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்கின்றோம்.

ஆலங்கேணி
பூநகரி.

நினைவகலா நினைவுடன்
அப்பாவுடன் ஆண், பெண் மக்கள்
மருமகர், மருகியர் , பேரர்,
பேத்தியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிந்தை நிறைந்த தாய்

மண்மகிழ
13
10
1945

கண்நெகிழ
01
01
2017



## அமரர் திருமதி. ஐயம்பிள்ளை சின்னப்பிள்ளை

அவர்களின்

திதி நிர்ணய வெண்பா

தூய துர்முகி ஆண்டது மார்கழித்திங்கள் பதினேழாம் நாள்
பாயும் வளர்பிறை பட்சம் திருதியையுடன்
-திருவோணம் தான் சேர
ஏய நல்மனதுடைத் திருமகளாம் சின்னப்பிள்ளைதானும்
தூயருள்தரு விநாயகனடி சார்ந்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் வட மேற்காம் பொன்னகர்
என விளங்கிடு
பூநகரிப் பிரிவு சேர் ஆலங்கேணி
பதி வாழ்ந்த
உயர் சைவ வேளாண் குல திலகரென விளங்கிய
பேரர் பேர்த்தியர் இராமு பொன்னம்மா
வீரகத்தியர் சின்னப்பிள்ளை அவர்களின்
பேர்த்தியும் வேளாண் வித்தகர் திரு. திருமதி
கனகசபை பூரணம் தம்பதிகளின் சிரேஷ்ட
புத்திரியும் அவ்வூர் சேர் உயர் சைவ வேளாண் குல
மரபு வம்சா வழி வந்த ஐயம்பிள்ளை தன்
பேர்த்தியும்
திரு. அருணாசலம் கற்பகம் தம்பதிகளின்
மருமகளும்
மாண்புறு சமூக சேவையாளரும் சமாதான
நீதவானுமாகிய
உயர்திரு ஐயம்பிள்ளை அவர்களின்
இல்லற வாழ்வின் பிரிய பத்தினியுமான
அமரர் திருமதி ஐயம்பிள்ளை சின்னப்பிள்ளை
அவர்களின் தேக வியோக யாக்கை குறித்த
திருவருள் நினைவஞ்சலி இராகமாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து .

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
தன்னை மறந்தாள் தன் நாமம் கேட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்றாளே

## திருவாசகம்

நானேயோ தவம் செய்தேன்? சிவாய நம எனப் பெற்றேன்
தேனாயின் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்தெனக்கருள் செய்தான்
ஊனாயின் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே, வெறுத்திடவே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பேல்

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகனங்கி
யிரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் சிறந்து
பாரோர் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மண்ணுல கத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எழுதில் முற்றறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமோ டவல்பொரி
கப்பிய கரிமுகனடிபேணிக்
கற்றிடுமடியவர் புத்தியிலுறைபவ
கற்பகமெனவினை - கடிதேகி
மத்தமும் மதியமும் வைத்திடுமரன்மகன்
மற்பொருள் திரள்புய - மதயானை
மத்தள வயறனை உத்தமி புதல்வனை
மட்டவிழலர்கொடு - பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய - முதல்வோனே
முப்புரமெரிசெய்து அச்சிவன் னுறைரதம்
அச்சது பொடிசெய்த - அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புனமதனிடை -இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அமரரின் வாழ்க்கைச் சுவட்டினிலே (வரலாறு)



யாழ் பாடி பரிசாய்க் கொண்ட யாழ்ப்பாண ஈழத்தேசம்
தேசத்தின் வடமேல்பால் சேர்ந்ததொரு திருநாடாம்
பூநகரின் பொன்விளை ஆலங்கேணிதனில்
செந்நெல் கழனியுடன், தெங்குடன் பலவும் பிறவும் சேர்ந்த
மருவுநெறி உயர்சைவ வேளாண்குலம் காக்க வந்த
பரவு பண்புநிறை பார் அறி பண்பாளன் இராமுதானும்
கரவில்லா உறவுமுறை கைப்பிடி நங்கையென வந்த
தெரிதகு முக அழகு சேர் பொன்னம்மாவும் சேர்ந்த காலை

அரியதொரு மங்கையென பொலிவுறு
பூரணமும் பூமியில் உதித்தனளே;
உதித்திட்ட மங்கைதனை உரியவழி வளர்த்திருந்தே
உறுபருவம் கண்டதாலே
விதித்த வழி வாழ்வு காண விரைந்துமே மனத்திலுய்ந்து
சொந்த ஊர் சேர் தூய வேளாண் மரபு வந்திட்ட
பந்தமாம் வீரகத்தியரும் வேண்டிய வாழ்வு காண
சிந்தை மகிழ் சிரிப்பழகி தேன்மொழிச் சின்னம்மாவைச் சேர்ந்தே
வந்த வழி வாழ்வின் வகை தெரி இல்லறந்தனில்
தந்தை தாய் மகிழ வந்திட்ட காளை கனகசபைதனை
முந்து வினையறந்தனில் முறைகண்ட பூரணம் தனை
இந்த ஊர் விநாயகனின் இறையருள் சேர்ந்திருக்க
விந்தை புரி இல்லறந்தனில் இணைத்துமே மகிழ்ந்த காலை

அற்புதமாய் அருள் ஈந்த ஆனைமுகன் தன்னருளால்
பொற்புடைப் பூரணமும் அன்னை தந்தையொடு மாமனொடு மாமிதானும்
மற்றுமுனோருடன்...........
இத்தரைதனில் இன்பமுறு தந்தையாம் கண்ணியம் நிறை கனகசபையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிப்புறவே

சித்தம் நிறை சிந்தனையால் சீரிய நெறியுடைச் சிரிப்பழகி
சின்னப்பிள்ளை தன்னோடு
உத்தம மனம் கொண்ட உவப்புறு பொன்னம்மாதனையும்
சத்தியவழி வாழ வந்த தனயனயாமை செல்வரத்தினம் தன்னோடு
வித்தகி என விளங்கி நின்ற வினையறியா சிவயோகம் தனையும்
குத்துக் கதைபேசி மகிழ் குணாளன் குணசிங்கமும் சேர
தத்துவம் பேசி மகிழ்ந்த தயவுநிறை தேவராசாவுடன்
மெத்தமிக வசனம் பேசி மேதினியில் வாழ்ந்த
மொத்தமாய் மக்களென எழுவரை ஈன்று மகிழ்வேளை
மகேந்திரம் தன்னோடு
உத்தம சகோதர சகோதரிகள் ஒன்றுகூடி வாழ்ந்தே வளர் காலை

புத்தி ஆறி பூவையென வந்த சிற்றிடையாள் சின்னப்பிள்ளைதனை
சத்தியநெறி வாழ தகு மணம் காணவேண்டிய விருப்பினாலே
நித்தமும் செல்வம் கண்ட நீடுபுகழ் வேளாண் வழி சேர்
ஐயம்பிள்ளைதானும்
குற்றமில் தொழில் கொண்டு குலம் வாழ மணவாழ்வு கண்டே
சுற்றறிவு கொள் கனவானென அருணாசலம் தன்னைப் பெற்றெடுத்தே
அற்புத மகளென ஆறறிவு ஊட்டிவளர்த்தே மகிழ்வேளை
மற்றவர்கள் மதித்திடவே மதிமுக வதன மங்கை கற்பகம் தனைஉற்றார்
மகிழ உறுமணம் செய்து வைத்தார்
செய்த மண வினை தனிலே சேர்ந்திட்ட பயனதுவால்
ஐயம் இல்லா சேவைதனை அவனியில் செய்யவந்த
தூய நல் சொல்லான் துலங்கு புகழ் பட்டங்கள் கண்ட பொய்யுரை பகலாத
புகழ் சேவையாளன் ஐயம்பிள்ளைதனை
செய்த நல் தவத்தாலே திருமகனாய்க் கண்டே வாழ்ந்திருக்க
கண்டே நற்றவப் புதல்வன் தனக்கு மூத்தோராய் கொண்ட
மண் மகிழ வந்த மதியுடை இராசம்மாவும்
கண்ணில் கருணைநிறை வினையறியா விசாலாட்சியும்
நண்ணியே சோதரராய் வந்த நாகபூரணத்தையும்
விண்ணாளும் அரனருளால் வியத்தகு மக்களாய் கண்டிருந்தார்
மன்னோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் திருமண
# வாழ்வின் பேறு

பார் போற்ற பத்தினியாய் வாழ்ந்த பக்குவம் அறி
சின்னப்பிள்ளைதனையும்
ஊர் போற்ற உத்தமனாய் வாழவந்த உறு பணியாளன்
ஐயம்பிள்ளைதனை
சீர் நிறை செல்வம் சேர சிறப்புறு மணமும் கண்டார்தான்
சிறப்புறு மணந்தனில் சிந்தைகுலையா மனத்தோடு இல்லறந்தனில்
திறனுறு விநாயகனடியோடு கரியதறைவைரவர் பாதந்தனை
நறுமுறு நானிலம் சேர் மக்கள் வாழ்ந்த ஏத்தியே வழிபட்டு
பசிய மனமுறு பக்குவமறி பரிவுடைப் பாஸ்கரன் தன்னோடு
வசிய முகங்கொள் வாண்மையாளன் சிறீதரனையும்
கசிவுடைச் செயல்புரி காரியபரன் சுந்தரனாம் சுபாஸ்கரன்தனையும்
விசித்திரச் செயல் நிறை வினையறியாச் சிவநந்தினிதனையும்
முறுவல் நல் சிரிப்புடன் முந்துபயனறி முரளீதரன்தனையும்
ஆறறிவு கொள் அன்பு நிறைச் செயல்புரி கிருபாகரன்தனையும்
பேரறிவு கொள் பெருமனத்தோன் பெருமைநிறை பிரபாகரன் தன்னோடு
கூறிய குவலய வாழ்வில் கொண்ட நல்லறம்தனில்
அறிந்திடு எழுவகைச் செல்வங்களென கண்டே இன்புற்றிருந்தார்.

இன்புற்றிருந்த காலை இனிய செல்வளென வந்த மக்கள் தம்மை
இப்புவி அறிய அறிவூட்டி அரிய பல சீர் செய்து நிற்க
தப்பில்லா வாழ்வுக்கு தகவுடைச் செல்வம் தேட
ஒப்பில்லா ஐரோப்பிய கண்டம்தனுக்கே அனுப்பி மகிழ்ந்து
அப்பழுக்கற்ற வாழ்வினை ஆற்றி மகிழ்ந்தனராம் பெற்றோர் தாமும்
பேருவகை கண்டு வாழ்ந்த பெற்றவளாம் சின்னப்பிள்ளையோடு
ஐயம்பிள்ளைதானும்
திரு என விளங்கிடு செல்வங்களாம் சேய்களொடு நங்கையும் வாழ
வரு வினையகற்றி வாழத்தேர்ந்தெடுத்த
மருகர்களை சேர்ந்து மகிழ்ந்த காலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னவனாய் வந்த முறுவல் முகங் கொள் பாஸ்கரன் தனக்கு
தன் மரபு வழி தகுநல் தயவுநிறை யோகராசா பரமேஸ்வரியும்
இன்புறு மகளாய்க் கண்ட இனியமொழி யோகமீராதனை
கன்மவினை யகற்றி வாழ கனிவுறு மணம் கண்டே மகிழ் வேளை
மாண்பான மணவினை கண்ட மகன்தானும் மாசில்லா வாழ்வில்
பண்புடைப் பசிய மனத்தாள் பஷிகா தன்னோடு
வண்ணமொழி வகைதெரி வடிவழகி துவாரகாதனையும்
திண்ணமான செயல்நிறை திருந்து நல் அறிவுடைத் துளசிகாதனையும்
மண்ணினில் மாண்புடன் பெற்றே வேற்றுநாட்டில் வினையகற்றி
வாழ்க்கின்றனரே
பின்னவனாய் வந்த பெரும்பயன்சேர் பேரறி தனயனாம் சிறீதரன்
தனக்கு
தன் குலமோங்கத் தரணியிலே செல்லத்துரை இந்திராணி
சுளிவுடன் ஈன்றெடுத்த காரிகை சாயினி தன்னைச் சேர வைத்தே
தனிமொழி மதுர கானக்குரலிசை குழவியாம் மதுராதனையும்
நனி சிறப்புடை நல் வார்த்தை பேசி மகிழ் மதுரன் தனையும்
இனிய நற்பண்பு சேர் இனிய இல்லறந்தனில் கண்டே நாடாது விட்டேகி
நலமுடன் வாழ்வு கொண்டனரே
சுந்தரம் நிறை சுகமான மொழி பேசிடும் சுபாஸ்கரன் தனக்கு
பந்தமென உறவாட வந்த பசிய மன பால்ராஜ் அன்னபாக்கியம் சந்ததி
காண ஈன்ற தனிச்சிறப்புடை நங்கை மீராதனை
விந்தைபுரி இல்லறத்தில்இணைத்தே மகிழ்காலை
கரிமுகனாம் கஜமுகன் அருள்தனில் கவலை தெரியாக் கரிகரனையும்
சிரித்து மகிழ் சிங்கார நடைகொண்ட திவ்விய திஷிகரனையும்
வரிசையாய் வகைதெரிவாய்ச் சாலகனென வந்த சுமித்தனையும்
கண்டே பிசகில்லாச் செல்வம் தரு பிரான்ஸ் நாட்டில் பெருமையுடன்
வாழ்கின்றனரே
மாசில்லா மங்கையென வந்துதித்த மாணிக்க சிவநந்தினிதன்னை
காசினியில் மாங்குளம் பதி வாழ் பொன்னுத்துரை சுந்தரியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசிய நன் மனதுடன் ஈன்றெடுத்த காளையாம் சிந்தனை நிறை சிவசோதிதனைக்
தெரிதரு சிவனருளால் சேர்த்தே மகிழ்ந்திருக்க
பரிவுடைப் பாலகனாக பார்போற்ற வாழ வந்த பாரணன் தானும்

அரிய நல் புத்திரனாய் அவனியில் வந்த கெவின் தன்னோடு
திருவுடைத் தேன் மொழி அணங்கென வந்த சரணியும்
மறுவில்லா வாழ்வு காண மக்களெனக் கொண்டே
பெருநாடாம் ஜேர்மனிதனில் பிசகில்லாது வாழ்கின்றனரே
முத்தான சோதரர்க்கு முகிழ்ந்த தம்பியென மிளிர்முரளீதரன் மகனை
குற்றமறிய சித்தம் நிறை சிவன்சுதனருளால் குணசிங்கமும் கலைவாணியும்
இத்தரைதனில் இங்கித மொழியாள் இசைவுடன் வாழவந்த இனிய மிதுலா தனை
பத்தியால் வணங்கிடு கஞ்சுதற் கடவுளாம் வைரவர் அருள்சேர சேர்த்தே இருகாலை
வித்தை அறி வினையில்லா மகனும் கண்டிருந்த வாழ்வதனில்
பெரும் பொருள் நிறை பிரான்ஸ் நாட்டில் பெருமனதுடன் வாழவைத்தனரே
சோதரர்க்கு தோல்வியறியாச் சோதரனாகி வந்த துன்பமறியா கருணைமிகு கிருபாதனக்கு
புதுஉறவினில் வந்த புரிந்துணர்வு நிறை செல்லப்பா செல்லம்மா தன்னோடு கலந்த இன்பத்தில் வந்திட்ட
விதப்புரை வாய்மொழியாள் விஞ்சு மனமுடை சகுந்தலாதனைச் சேர்த்து மகிழ
கனக மணியென வந்த காருண்ய மகனும் வாழ்வின் உறவினில்
புனிதச் சிரிப்புடைப் பேரழகி புதுக்கதைச் சொல்லழகி நிவிநிதாதனை
நனிவுறு நற்பயனால் பெற்றே மகிழ்ந்திருந்த காலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்திட்ட சோதரர்க்கு பிந்திய சோதரனாய் வந்த பேதமை அறியா
பிரபாகரன்தனை
உறவுமுறை கொள்ள வந்த உற்றநல் கனவான் சதாசிவமும் ரஞ்சிதாவும்
கண்டிட்ட திறமுடைத் திருத்தமான செயல் தெரி தேவியென வந்த
தனுஷயா தனை சேர்ந்தவேளை
மறுவில்லா மா வாழ்வில் மகிழ்வுடன் இப்புவி காண வந்த
நிறைசெல்வமாதென வந்த சௌமியா தன்னொடு
கறை தெரியாது கச்சிதமொழி பேசிடு கயல்விழி மகிஷாவையும்
பிறைசூடும் எம்மானருளால் பெற்றே புதுமைநிறை ஜேர்மன் நாடதில்
வாழ்கின்றனரே
வகையறி வாழ்வினில் வையகம் மெச்ச மகிழ்வுடன் வாழ்கின்றனரே
தகையுடைத்தன் கொழுநன் தன்னோடு தரணியிலே மக்கள்
தம் மகிழ்வுறு வாழ்வுகண்டு மழலை மொழிப் பேரர், பேத்தியர் தம்
நிலையான இன்பவாழ்வு இனிதே காணவேண்டி
அல்லும் பகலும் அவைரதமும் ஆனைமுகனடியொற்றி
வல்ல நல்ல வைரவக் கடவுளரின் வகையா நெறிதனில்
தொல்லையில்லா சுகவாழ்வு கண்டே மகிழ் காலை

அகவை அறுபதொடு ஒன்பதுடன் மாதங்கள் கூட
புகுந்த வாழ்வில் புங்கனவன் விதித்திட்ட விதிசேர
தகுநல் தர்மவான் கணக்கினை முடிக்கவெண்ணி
தொலையாத நோயிதனை துயர் காணவைத்து
நிலையான கற்புடன் நீடூழி வாழ்ந்திருந்த
தலையாய மகனெனவந்த சின்னப்பிள்ளைதானும்
குறையாத நெறி கண்ட தாலிபாக்கியமொடு
நீடு அருள் தரு விநாயகனடி சேர வேண்டி
கூறிடு மார்கழித்திங்கள் கொள் அமிர்தயோகம் கூட
அறிந்திட்ட அவனி வாழ்வை நீத்து அரனடி சேர்ந்ததாலே
மானிடப்பிறப்பில் மரணம் நித்தியமாம் எனத் தேறி
கனிவுடன் கஜமுகனடி தொழுதே கருணையுடன்
சின்னப்பிள்ளை தனக்கு முத்தி அளிக்க வேண்டித் தொழுதிடுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறு

இங்கிதமொடு இறைவழி நின்று இல்லறந்தனில்
பொங்கிய மனதுடன் உடன்பிறப்புக்களாய் வந்திட்ட
சிங்காரச் சிரிப்பு நிறை சீரிய மனம் கொண்ட பொன்னம்மாவாம்
சோதரிக்கு
மங்காத வாழ்வு காண மதிநிறை மன்னனென வந்த கந்தையாதனை
சேர்த்தே
பங்கயமலரவனருளால் சகோதரியும் மனம் நிறை வாழ்வுகாண
வைத்தே மகிழ்வுற்று
செந்தமிழ்ப் பேச்சுடை பெருமனத்தோன் செல்வரத்தினம்
தம்பியாம்தன்னை
தந்திர ஜாலம் நிறை தர்மதேவதையென வந்திருந்த
தர்மகுலராணியை மணம்கண்டு
மணமெனும் இல்லறத்தில் மாற்றுமனமறியா சோதரனும்
மகிழ்வுடன் வாழக் கண்டே
தம்பிதன் இளையவளாய் வந்த சிந்தை நிறை மகிழ்வுடன் சீரிய
வாழ்வு காணும் சிவலோகம்தனையும்
தம் உறவின் வழி வந்த தர்மவான் தரணிமெச்சும் சுந்தரலிங்கம்தனை
கூடவைத்தே
பம்பரமாய்ச் சுழலும் உலகவாழ்வில் பயன்காணவைத்தே
மகிழ்ந்தார்
எம்பெருமான் அருளாலே உற்ற சோதர சோதரிகளுக்கு உறுநல்
துணையாய் வந்த குலத்துதித்த குணசிங்கம்தன்னை
கோதில்லா கோதையென வந்த குலக்கொடி கோமதிதன்னை
கூறிடுவாழ்வில் இணைத்தே
வாதில்லா வாழ்வு காணவைத்து வந்த பயன் கண்டிருந்த காலை
தீதில்லா நெஞ்சுடை தேறிய அறிவு கொண்டிலங்கிய
தேவராசாதனையும்
மதிப்புடை மாமனிதனாக மண்ணிலே வாழவைக்க மதியுடன்
வழிதேடி நின்ற காலை
விதியின் செயலறியா விஞ்சிய பாசம் கொள் வேதனையறியா
சின்னப்பிள்ளையும்
பாதியில் அவர் வாழ்வு பறிபோகுமென அறியாது பரிவுடன் தேடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற காலை
சதி செய்த காலனவன் கொண்டிட்ட பழியினால் பதைபதைத்தே
அழுதுமாய்ந்து பாவியாகி நின்றார்
மாற்றமுடியா மனத்துயரில் மாழ்கியே இருந்த காலை
மூத்தோர்க்கு அந்தமென வந்த ஆறுதல் கூறிடு
மெத்த அறிவுடை மேதினி மெச்சும் மகேந்திரம் சகோதரனையும்
வித்தாரம் நிறை வினைநிலமாம் தன் ஊரின் உறவினில் உதித்திட்ட
பத்தரை மாற்றுத் தங்கமென வந்த பதிவிரதை திருநிறை
திருச்சோதியைக்
இத்தரை வாழ்வில் இனிய மனம் காண வைத்தே மகிழ்ந்தே நின்ற
காலை
உற்ற தன் கணவர்க்கு உறுதுணையாய் வந்துதித்த சோதரியாம்
உளம் மகிழ் இராசம்மாதனை
நற்றவத்தின் பயனாய் வந்த நற்குணாளவன் தம்பிப்பிள்ளையைத்
தயவுடன் மணவாழ்வு காண வைத்தேயிருந்த வேளை

தற்பெருமையறியாத் தயவுடைத் தயாளமனமுடைத் தேவியென
வந்திட்ட விசாலாட்சியையும்
நற்குடிப் பிறப்பாய் நலம் பல காண வந்த சின்னத்துரைதனக்கு சீரிய
மணம் காணவைத்தே
கொற்றவனாம் விநாயகனருளால் அவர் தம் நிலையான வாழ்வு
கண்டே வாழ்ந்திருந்தார் மன்னோ
கண்டிருந்த சோதர சோதரிகளினது தன் கொழுநன் உறவில் வந்த
மைத்துன மைத்துனியையும்
வேண்டிய வாழ்வு காண வைத்து விளங்கு நல் குலமக்கள்
பேரர், பேத்தியரைக் கண்டே வாழ்ந்தனறன்றோ
தாய்க்குத் தாயாகி, தங்கையர்க்கு தம்பியர்க்கு சோதரியாகி
மைத்துன மைத்துனியர்க்கு மாதாவாகி
பந்தமுடன் வந்த மருகர், மருகியர்க்கு மதிப்புநிறை மாசில்லா
அன்னையாகி வந்த மாசில்லா சின்னப்பிள்ளையாம் பூபதியும்
இந்த வாழ்வு போதுமென்று இறைவன் பாதம் நாடியதால்
மங்காத சிவலோகப் பதவி நல்கவே நலம் தரு இறைவனை
வேண்டியே தேறுவோமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைப்பிடி நாயகனாம் கருணை நிறைக் கணவர்
# பெருந்துயர்ப் பிரலாபம்

பொருந்திய புதுவாழ்வாம் இல்லறம்தனில் என்னை
தெரிந்திடு திருமகளென தேடியே கரம்பிடித்த என்னவளே
வருந்தியே எனை வாடவிடாது எந்நாளும் அரவரணைத்து
அணைத்து நீரும்

பெற்றவளாய் பேதமையின்றி பெருங்குண மனைவியானாய்
நற்றவத்தின் பயனாலே நானுனைக் கைப்பிடித்தே நானிலத்தில்
மற்றவர் போற்ற என்னை மாநிலத்தில் மதிப்புடை மன்னனாக்கி வைத்தாய்
உற்ற நல் உறவாலே உறுநல் மக்களைப் பெற்றே மகிழ்ந்தவளே

கற்றவளே நானும் கதறியே உனை நினைத்தே வாட
தற்பெருமையில்லா தாயே என்னவளே நான்வாட ஏன் வைத்தாய்
குற்றமில்லா உந்தன் குலம் வாழ வைக்க வந்த மக்களும் எட்டியே தானிருக்க
வற்றாத துன்பமதால் வருந்தியே நான் அழுதுமே வாழவிட்ட
உத்தமியே உன் சேவை உன் மனத்தே நிறைந்ததென்றெண்ணியோ
வித்தகியே நீயும் விலகியே எனைப் பிரிந்தாலும் நாளும்
பத்தினியே உன்தன் பண்புதனை நினைத்தழுதே ஏங்கி இவ்வுலகில்
கத்திய நிதம் அழுதே மாய்ந்து உனைத்தேடி ஓர் நாள் வருவேன் என்னவளே
மாற்றவோ முடியவில்லை மாற்றிடவோ யாருமில்லை
மாறாத துயராலே மயங்கியே தேடுகின்றேன்.

---

**நான் வாசித்த வரிகளில் யோசித்தவரி அம்மா**
**சுவாசித்த இதயங்களில் நேசிக்க வைத்த இதயம் அம்மா**

---


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரேஷ்ட புத்திரன் பாஸ்கரன்
# நெட்டுயிர்ப்பிரலாபம்

அம்மாவே! அம்மாவே! அன்பு நிறை அம்மாவே!
என்னருமைத் தாயவளே ஏற்றமிகு அன்னையளே!
உன்துயரை நீமறந்து உளம் மகிழ எனை வளர்த்தாய்
உற்ற நல் அறிவு தந்து உயர்நிலை காணச்செய்தாய்
வற்றாத அன்பினாலே வகைதெரி நிலையைத் தந்தாய்
மற்றவர் மகிழ்ந்திடவே மாண்புடை வாழ்வுதந்தாய்
சற்றே நான் விலகி எட்டியே இருந்த காலை
பற்றி நின்ற பாசம்தனை பாதியிலே பறித்தெடுத்து
கற்றவளே நீயும் காலன் வழி சென்றதனால்
திக்குத்திசை தெரியாது திகைத்து வாடி ஏங்கியழுதே
பக்கத்திலிருந்தே பணிசெய்ய முடியாத பாவியென கதறியே அழுதுமாய
ஏக்கத்துடன் எனை நினைத்தோ எனைப்பிரிந்து சென்றாயம்மா!
அம்மா! அம்மா! அம்மா! யாரறிவார் என் துயரை
ஆறிடாது உன்நினைவு ஆற்றிடவும் முடியாது அம்மா! அம்மா!

அம்மா

நாங்கள் நலமாய் வாழவே..
வலிகள் எம்மைத்தாக்கினால்
வலிப்பதென்னவோ உமக்கல்லவா
துயரங்களால் எம் விழி நனைந்தால்
துடைப்பது
உம் விரல்களல்லவா..
சோதனையானாலும் வேதனையானாலும்
தோள்கொடுக்கும் தோழி நீங்களல்லவா..
அனுதினமும் போற்றப்படவேண்டும்
உம்புகழ்
பூவுலகம் வாழும் காலம் வரை...! அம்மா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது புத்திரன் சிறீதரன்

# இன்னுயிர் நினைவஞ்சலி

கொற்றவனாம் எம் பிதாவுக் குணவதியாய் வந்தே வாழ்வு கண்டாய்
அற்பத்தனம் அறியாத அன்புருவே எம் அம்மாவே
உற்ற உன் இல்வாழ்வில் உன்தனுக்கு மகனானேன்
பெற்றவளே எமக்காக பெரும் துன்பம் கண்டவரே
இந்த மண்ணில் இன்பமுடன் எமை வாழ வைத்தவரே
சொந்தமாக உன்தனுக்கு நீ எதையும் கேட்டதில்லை
வந்த துன்பம் நீ மறைத்து எமை வாழ வைத்தவளே
எந்த ஊர்தனுக்கு எமைவிட்டு நீ சென்றாய்

என் கண்மணியில் ஆடுகின்ற கருணை நிறை என் அம்மா
துன்பம் தன்னை நீ தந்து தூரஇடம் சென்றதனால்
ஊன் மறந்து உணர்விழந்து உற்ற துயர்தனில்
உழன்று நான் வாடுகின்றேன்
என்னவளே என் தாயே எங்கு நான் தேடிவர
ஆறாது ஆறாது ஆற்றவும் முடியாது
தேறாது தேறாது தேற்றவும் முடியாது
பிறப்பிருந்தால் மீண்டும் எம் தாயாய் வந்து விடு
பெற்றவளே உன் நினைவால் பிதற்றியே தேடுகின்றேன்.

---

**பண்புகள் என்று சொல்லப்படுவன எவை?**

1. நற்குணம் 2. நல்லகலாசாரம் 3.நல்லொழுக்கம்
4. நல்லியல்பு 3. நல்லதாரம் 4. நல்லவிதம்

**மனிதர்கள் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்கள் எவை?**

அகிம்சை, சத்தியம், பிறர்பொருள் விரும்பாமை, தூய்மை, புலன் அடக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது புத்திரன் சுபாஸ்கரன்

# உற்றதுயர் சோகமதில்

பேர் அறி பிள்ளைகளாய் எனைப்பெற்றே நீ மகிழ்ந்து
ஊர் அறி உத்தமனாய் உன் அன்பால் நீ வளர்த்தாய்
சீர் நிறைந்த வாழ்வு நான் காண நீ பட்டதுயர் நானறிவேன்
யார் அறிவார் என் இதயமதில் நீயிருந்து ஆள்வதனை

மன்னவனாம் எம் பிதாவிற்கு மாசில்லா துணைவியாகி நின்றே
என்னுடனே சோதரங்களும் ஏற்றமிகுவாழ்வு காண இருவீரும் கண்டதுயர்
அன்பான அம்மாவே யாரை இனி அம்மா என்பேன்
துன்பமான துயர்வாட்ட தொலைதூரம் எங்குசென்றீர்

கிட்டநான் இருந்திருந்தால் காலனைக் காலால் உதைத்திருப்பேன்
எட்டியே நின்றதனால் ஏக்கம் மிச்சமம்மா
கொட்டி நான் அழுதாலும் கொண்டகாலன் விடுவானோ
தட்டிக்கேட்க யாருமில்லையென்றோ தரணிவாழ்வை நீ வெறுத்தாய்

அம்மாவே அம்மாவே யார் வருவார் உன்போல
அம்மாவே அம்மாவே யாரறிவார் என் துயரை.

---

### மூன்று வகை அழுக்குகள் யாவை?

மன அழுக்கு - பொறாமை, ஆசை, கோபம், பகை
வாய் அழுக்கு - பொய், புறங்கூறல், தீச்சொல்
மெய் அழுக்கு - கொலை, புலை, களவு, பிறன் மனை நோக்குதல்

### குணங்கள் 12ம் யாவை?

ஞானம், சத்தியம், அடக்கம், கல்வி, பிறருடைய குணங்களைக் கண்டு பொறாமையின்றியிருத்தல் , நாணம், பொறுமை, வேள்வி, பிறர்பழிகூறாமை, கொடை, தைரியம், அமைதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகபுத்திரியாய் திருமதி சிவசோதி சிவநந்தினி
# மாறாத மனத்துயர் கண்ணீர் நினைவதனில்

பெண்குலப் பெயர் சொல்லப் பெண்மகவாய் எனை ஈன்றாய்
கண்ணியமாய் எனை வளர்த்து கனகமணி வாழ்வு தந்தாய்
மண்ணிலே நான் வாழ மாசில்லா மன்னவனைச்சேர்த்து -வைத்தாய்
பண்பான உன்செயலை பார்மக்கள் வாழ்த்தும் காலை

அம்மாவே உன் ஆசைமுகம் அன்புடனே எமைப்பார்க்க
அம்மாவே நீயும் அறிவுடன் இருந்த வேளை
அம்மாவே நானும் அருகிருக்க முடியாப்பாவியானேன்
அம்மாவே அம்மாவே எப்பிறப்பில் உனைக் காண்பேன்

அம்மாவே நீயும் ஆறாத்துயில் கொண்டு எமைவிட்டேகியதால்
அம்மாவே உன் நினைவோ நிழற்படமாய் ஓடுதம்மா
அம்மாவே எந்தனுக்கு அணைகுழந்தையாய் வருவாயோ
அம்மா! அம்மா ! அம்மா!

---

### மூவகைப் பாவங்களும் எவை?

| | |
|---|---|
| தானே செய்தல் | -கிருதம் |
| பிறரைச் செய்யும்படி செய்தல் | -காரிதம் |
| உடன்பட்டு நிற்றல் | -அனுமோதம் |

### பஞ்சமகா பாதங்கள் எவை?

காமம், கொலை, கள்ளுண்ணல், பொய், களவு

### எந்த மூன்று விடயங்கள் மனிதனுக்குகெடுதல்களை விளைவிக்கின்றன?

கொஞ்சம் அறிந்து அதிகம் பேசுவது
கொஞ்சம் இருந்து அதிகம் செலவழிப்பது
கொஞ்சம் தகுதி இருந்தும் தன்னைப் பற்றி அதிகமாக நினைப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காவது புத்திரன் முரளிதரன் பெருந்துயர்ப் பேரவலமதில்

முன்னை நீ புரிந்த தர்ம வழிப் புண்ணியத்தால்
பின்னவனாய் சோதரர்க்கு பெரு உறவாய் எனை ஈன்றாய்
தன்னலமில்லா உன்தன் தாயன்பால் எனை வளர்த்தாய்
கள்ளமில்லா வாழ்வு நான்காண நீ கொண்டதுயராயிரமாம்

தகுநல் தயவுடனே தகமைபெற எனைப் பேணி நின்றாய்
வெகு செல்வம் நான் தேடவேற்று நாடனுப்பி வைத்தாய்
பாகு பாடில்லாது பாரி பண்ணி பகுத்தறிவு ஊட்டி நின்றாய்
வேகுதம்மா என்னுடலும் வெந்து மனம் நோகுதம்மா

கடை நோயும் உனைவாட்டியதால் கலங்கியதம்மா என் ஆவி
கடன் செய்ய அருகிருக்க முடியாத பாவியானேன்
நடை தளர்ந்து நீ படுத்து நமனுலகம் சென்ற காலை
கூட இருக்க முடியாக் கொடும்பாவி ஆகி நின்றேன்

அம்மா உன் நிழற்படத்தை அன்னைதான் தெய்வமென்றெண்ணி
அனுதினமும் வணங்கியே உன் ஆசியில் வாழ்ந்திருப்பேன்.

### பசிவந்திடப் பறப்பவை எவை?

மானம், குலம், கல்வி, வன்மை, அறிவுடமை, முயற்சி, தவம், தாளாண்மை, கர்மம், தானம்

### நான்குவகைப் பேறுகள் எவை?

அறம், பொருள், இன்பம், வீடு

### ஏழு மண்டலங்கள் எவை?

வாயு, வருணன், சந்திரன், சூரியன் , நட்சத்திரம், அக்கினி, திரிசங்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகிருந்த ஐந்தாவது புத்திரன் கிருபாகரன்
# நினைவஞ்சல் கண்ணீரில்

பிறந்திட்ட பயனதினில் பெருவாழ்வின் செல்வமென -இல்லறமதில்
அறவழி வாழ்ந்தே அன்பான முத்துக்கள் எழுவரைக் -கண்டகாலை
கூறிய முத்துக்களில் ஐந்தாவது முத்தாய் எனைக் கண்ட -மாதாவே
திறன் மிகு மகனென எனை வளர்த்தே சீர் பல செய்து -வாழவைத்தீர்

உறக்கமின்றி உடல் நலிவு பாராது உத்தமியாகி எமைக்-காத்தாய்
மறந்துமே எம் மீது கோபமது கொண்டதில்லையம்மா
மாறாக எமக்காக மெழுகாகி உருகி நீயும் மதிப்புறு - அன்னையானாய் அறம் பல
செய்து அரியநங்கை பூபதியென மற்றோர் போற்ற-நின்றமாதே

தர்மவழி நின்றே தகுநல் அன்னபூரணியாய் தரணியில் - வாழ்ந்த அம்மா
நேர் வழி நின்றே தகுநல் அன்னபூரணியாய் தரணியில் -வாழ்ந்த அம்மா
நேர் வழிகாட்டி எமை நிலையான செல்வம் தேடவைத்தே
ஊர் அறி உத்தமியென வாழ்ந்த உயர் குணவதியே
கார்முக காலன் வழிதேடி நீ சென்றதனால் கலங்கியே - ஏங்குகின்றேன்.

ஏங்கி நானழுதாலும் எழுதிய விதி மாறிடுமோ
தாங்கொணாத் துயராலே தவித்துமே நான் வாட
மங்காத மனமுடைய மாணிக்க மாமணியே என் அம்மா
எங்கு நீ சென்றாயோ ஏந்திழையே என்தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாவது புத்திரனென வந்த கடைக்குட்டியாம் பிரபாகரன் பேரவலப் பிரலாபம்

புத்திரரில் ஈர்மூன்று ஆறாவதாய் எனை ஈன்ற மாதா
இத்தரை வாழ்வதனில் இங்கிதமாய் நாம் வாழ வழி செய்தவரே
உத்தமியென ஊரெல்லாம் உவகை கொள்ள உறுபணி -செய்த அன்னையே
சத்தியமாய் எமை விட்டு சடுதியிலே நீ போவாயென கனவிலும்
- எண்ணவில்லை

கொடுநோயால் உடல் வாட கொண்டபடுக்கையில் நீயிருந்து
அடுக்கடுக்காய் அல்லல் பல கண்டே அறிவிழந்து நீ - இருந்த வேளை
மிடுக்கான உன் நடையும் தளர்ந்து மேதினிவாழ்வை நீ துறக்க
சடுதியாய் வந்த யமனும் கருணையின்றிக் கவர்ந்தானோ

செல்லப் பிள்ளையா பிரபா நான் உன்தனுக்கு ஏது பணிநான் -செய்தேன்
அல்லல்நிறை இவ்வாழ்வில் யார் தான் நீடுவாழ்வார்
நல்ல பல அறிஞரொடு நாடு போற்றிட்ட மகான்களும்
சொல்லிய வீதிவழிதூல வாழ்வை நீத்தனரன்றோ

மங்கையர்க்கு மாதரசி மாணிக்க மதிநிறைமாதே
பொங்கிய கவலைகளை பொறையுடன் நானடக்கி
பங்கய மலரவன் பகுத்துமே விதித்தவழி மாதாவே நீ - சென்றதனால்
நீங்காத நிலைபேறு நீயடைய வேண்டியே இறைவனை
- இறைஞ்சியே வாழ்ந்திருப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் பிறந்த சகோதர சகோதரிகள் உற்றதுயரில்

உடன்பிறப்பே எம் அக்கா உயிர்க்குயிரான தாயவளே
திட மனதுடன் தெரிநல் வாழ்வு எமக்களித்தே நாளும்
படபடப்பில்லாது பல உதவி தந்தே பக்கத்திருந்து பார்த்தவரே
கடமை எமைச் செய்யவைத்து காலன்வழி சென்றதனால்

பண்பான அக்கா பரிவுடன் எமக்கு அன்னையுமாகி நின்றாய்
தண்ணளி முகத்துடனே தாயாகி எமை வாழ வைத்தவரே
எண்ணமெல்லாம் உனைச்சுற்றி ஏக்கமுடன் அலையுதம்மா
வண்ணமுகம் காணாது வாடியே ஏங்கியழுகின்றோம் நாம்.

## பெறாமக்கள் மாறா மனத்துயர்தனில்

பொன்னகராம் பூநகரி பூவையர் திலகமே
நன்மனம் கொள் மாதாவென மங்கையர் திலகமானவளே
எந்நாளும் எமைப்பெற்றெடுத்த மக்களாய் பேணியே
துன்பம் துயர் தெரியாது தூய அன்பு காட்டி நின்றீர்

கண்ணீரும் ஆறாகி கரைதெரியா தோடுதம்மா
பெண்ணரசி உன் உருவம் எம் நினைவில் பலகதை பேசுதம்மா
மண்ணிலே மாதரசியாகி நின்ற மணிமுத்தே பெரியம்மா
விண்ணாள நீ சென்றதனால் விழிநீர்சொரிய ஏங்குகின்றோம்.

**ஆயிரம் சொந்தங்கள் அணைத்திட இருந்தாலும், அன்னையே உம்மைப்போன்று அன்பு செய்ய யாருமில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துன மைத்துனிமார்

பத்தாவுக்கேற்ற பதிவிரதையாகி எங்கள் பாரறிந்த
-மைத்துனியே
சித்தத்தில் என்றும் சிறுமையில்லா மனம் கொண்ட
- எம் சிந்தை நிறைமைத்துனியே
உத்தம உன் குணத்தால் ஊரோடு மற்றவரும் உற்றவரும்
- உருக்குலைந்தே வாடுகின்றார்.
நித்தமும் எங்கள் நினைவினில் வாழும் மைத்துனியே
- எங்குற்றாய் எமைப் பிரிந்து
ஆறவோ முடியவில்லை அன்பான மைத்துனியே.

# ஆண் மருமக்கள் அரற்றல்

மருகர் என எமை எண்ணாமல் மகன்மார் என நினைத்திருந்தே
வருதுன்பம் நாம் போக்க வகையான அறிவூட்டி
திருமகன் செல்வம் தேட தேசம் விட்டே நாம் ஏகியதால்
அருகிருந்து கடன் செய்ய அரன் அருளும் கிடைக்கவில்லை

ஊரிலுள்ள உறவெல்லாம் பெயர் சொல்லி அழுதுரங்க
காரியங்கள் எல்லாம் கச்சிதமாய் நீ முடித்தே
வாரியே உன்னுயிரை வந்தகாலன் கவர்ந்ததனால்
பாரினிலே மண்மீது புரண்டுமே அழுகின்றோம்.

# பெண் மருமக்கள் பெருந்துயரில்

நெஞ்சிலே நீள் நினைவு நிழற்படமாய் ஓடுதம்மா
வஞ்சகம் இன்றியே வாஞ்சையுடன் அணைத்த மாமி
பிஞ்சு மொழியாலே பேசி எமை மகிழ வைத்தீர்
அஞ்சுகமே அம்மாவே அரவணைத்தே அறிவு தந்தீர்
பஞ்சமின்றி நாம்வாழ தொலைதூரம் எமை அனுப்பி நின்றே
எஞ்சி நின்ற இதய அன்பை இடையிடையே காட்டி நின்றீர்
துஞ்சிய துயராலே துவண்டு நீர் வாடி நின்ற வேளை
கொஞ்சநேரம் தானும் குவிந்த உன்முகம் காணவில்லை
மிஞ்சி நிற்கும் துயராலே மிகுதுன்பம் நாம் கொண்டு
வஞ்சமில்லா உன் உடல்காண வகையறியாதிருந்தகாலை
பஞ்சமுகம் கொண்ட பரமன் மகனடி நீ நாடியதால்
விஞ்சி நிற்கும் ஏக்கமதில் விம்மி நாம் அழுகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்றார் உறவினர் உருதுயரில்

தன்னிகரில்லாத் தகுநல் தலைவியென எம்மனதில் இருந்தே
பொன்னரிய செயல்தனை பொறையுடன் நீர் செய்தே
அன்பான சொல்லாலே அரவணைத்தே ஆறுதல் தந்தீர்
நின்னன்பின் ஆழத்தை நிறுத்தளக்க முடியாதய்யோ.

பாழான நோயாலே பரிதவித்து நீவாடியதால்
மீளாத துயர் தனிலே மாழ்கியே அழுகின்றோம்.
தாளாத எம்துயரை யாரறிவார் எம் மனம் நிறை மாதாவே
கோளது செய்த குற்றத்தால் குவலயத்தை நீ பிரிந்தாய்

# பேரர் பேத்தியர் பிதற்றல்

எம்பிதா மாதாவின் இனிய அன்னை எம் பாட்டி அப்பம்மா அப்பம்மா
அம்மம்மா என்ற நாமும் தப்பாமல் யாரை இனி தயவுடன்
அழைத்திடுவோம்.அம்மம்மா என்று அருகிருந்து அழைத்த காலை
தங்கமே என என்னை தட்டி அணைத்திந்தாய்
மங்காத மாணிக்கமாய் மாதரசியாய் இருந்த அம்மம்மா
தாங்காத நோயுற்று தவிர்த்து நீ வாடுகையில் பட்டத்துயரால்
நீங்காத துயர் தந்து நீ எமைப்பிரிய நினைத்தாயோ
அப்பம்மா அப்பம்மா ஆரமுதே அப்பம்மா நீயும்
அரவணைத்து எமைச் சீராட்ட உன் அருகே நாமிருக்கவில்லை
தூரதேசம் இருந்தகாலை தேடி நீ வந்த வேளை
கரவில்லா உன்முகத்தை கண்டு மகிழ்ந்தாலும்
அறியாது பருவமதில் எமை மறந்து எங்கு சென்றாய்
அப்பம்மா அப்பம்மா ஆரறிவார் எம்துயரை
அம்மம்மா அம்மம்மா அன்புருவே அம்மம்மா
ஆண்டுகள் சென்றாலும் உன் நினைவோ – மாறாது
அன்புடனே உனை நினைத்து எப்போதும் வாழ்ந்திருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார் உறவினரென எந்நாளும் துணைநின்ற கலாபூஷணம் திரு. பொன்.தில்லைநாதன் ஓய்வு நிலை அதிபர் நல்லூர் ம.வி நினைவரற்றல்

கழனி நிறை நானிலத்தில் சிறப்பினிற்கு நனிசிறப்புறு
- மாதரசியான பொன்மணியே
புகழ் கொண்ட பத்தாவிற்கு ஏற்ற நல் பதிவிரதை மாதே
நிகழ்கால வாழ்வதனில் ஆறறிவின் திறனாலே அன்பு நிறை
- அன்னையானவளே
இதழ்விரிக்கும் மலர் மொட்டின் இனிய மணம் வீசி நிற்கும்
- இன்பமான இதயம் கொண்டவரே
என் சேவை நாளதனில் இனம் புரியா இன்பமதில்
- பெண்ணினத்தின் உருவம் கண்டேன்
கண்டிருந்த நாள்முதலாய் என் உளம் நிறைந்த சோதரியாய்
- உண்மையான அன்பு கண்டேன்
பெண்ணரசே இவ்வுலகில் பேசும் தெய்வமாகி நின்று
- பேரருளை ஈந்தவரே
மண்வாழ்வில் மானுடரின் மரணம் அது மெய்மையினால்
- எமை மறந்து போனவரே
கண்மணியே சோதரியே கண்ணீரும் தான் வற்றி
- உடல் சோர்ந்து போனதக்கா
பண்பான உறவு தந்த பாசமுள்ள சோதரியே
- பதறியே நானும் பக்கத்திருந்து பால்தந்தேன்
உன் ஆவி பிரிந்த காலை என் இதயம் உடைந்ததம்மா
என் இனிய தாயவளே எங்குற்றாய் எமைப்
-பிரிந்து
உன் போல பெண்மைக்கு இவ்வுலகில் யாருள்ளார்
- என் இதயம் வாடுதம்மா எங்கேதான் நீ சென்றாய்
நின் உடல் பொருள் ஆவியெல்லாம் ஊர்மக்கள்
- வாழ்வதற்காய் உரிமையுடன் ஈந்தவரே
என்நாளும் என் இதயம் ஏங்கியே
- தேடுமக்கா
துன்பம் தந்து துயர் தந்து தூர இடம் எங்கு சென்றாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றவர்கள் மற்றவர்கள் உற்ற நண்பர்கள் உளம் நெகிழ் பிரலாபம்

உற்றவர் நலனுக்காய் உழைக்கும் கணவனுடன்
- உறுபணி பல செய்து
கற்றவரை விஞ்சிடும் காருண்ய வாழ்வு கொண்டே
- கயமை இல்லா உறவு கொள்வாய்
சுற்றத்தார் எமைக் கண்டால் சூரியனைக் கண்ட தாமரை போல
- உள்முகமும் மலருமம்மா
மற்றவர் பசித்திருக்க உன்மனமோ பொறுப்பதில்லை
உண்மையான அறந்தனில் அருள் நிறை
- தெய்வமானவரே
பெண்மையின் இலக்கணமாய் பெருமையுடன்
- வாழ்ந்தவரே
கண்மணியே எங்கள் பெண்ணினத்தின் மாணிக்கமே
விண்ணாள நீ சென்றதனால் வேகுதம்மா எம்
-மனமும் ஐயோ ஐயோ

## தேற்றம்

மதிதலவாழ்வு மானுடத்தின் மரணத்தின் முடிவுரையாகும்
விதி எனும் எழுத்தால் விரைவுடன் முடியும் வாழ்வு
கதியென நாம் கட்டியே பிடித்தாலும்
சதி செய்தே எம்மைச் சாகடிப்பது மரணமாகும்.

ஆறறிவுடன் நாம் தேறியே நினைந்திட்டால்
ஆத்மாவின் பிரிவு ஆன்மாவின் சட்டைமாற்றமாகும்
பிறப் பென்னும் நிகழ்வின் பெரும்பேறு இறப்பாகும்
பேதமை அகற்றி பெருந்துயர் நாம் நீக்கி
அன்னையின் ஆத்ம ஈடேற்றம் வேண்டியே
- பிரார்த்திப்போம்.

---

கவி ஆக்கம் தொகுப்பு கலாபூஷணம்
பொன் –தங்க ஜெகந்நாதன்
ஆங்கில, சிங்கள ஆசிரியர்
ஜோதிடநாவலர் ,வரகவித் தென்றல்
கலைக்கிளி, கலைநகரீ , நெற்புலவு
மட்டுவில்நாடு மேற்கு ,பூநகரி.

***"Death is given by god for human beings in the world but life is ever be happy for everyday by life. be faith with god".***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விநாயகர் துதி*

# கௌரிக் காப்பு

*முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு*
*என்னின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்*
*சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்*
*எக்குற்றமும் வாராமற்கா.*



வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகிஷாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரணை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரணை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்து விடு வையகத்தில் வாழ விடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பை புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கும் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்மைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ் சுடரே காளியுனைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலுள் ளோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு
## நேரிசை வெண்பா

### குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி நூல்

நிலைமாண்டிய ஆசிரியப்பா
சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு டிலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெறறென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈர்ராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மாஉபில்
பல் பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர் ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிகுடிகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேன் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
எண்றெலை வைத்துன் இணையடிகாக்க
என் உயிஉக்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர் வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரெண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறிகளை அயில்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்கா
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடியட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியம்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் ளென்பும்
நாகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஓட்டியப் பாவையும் ஒட்டியச் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாளெனைக் கண்டாறகலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கண்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணல்ஏரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
எறிய விஷயங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்புமசுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவயொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரர் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் குடியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறருக்கொண்டு
ஓதியே செவித்து உகந்துநீ றணிண





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் தருளுவரை
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நாவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டடாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாயக் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் – சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழிவர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் ரரசே
மயில்நடமிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவ ஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்ச விரு

♦ சின்னப்பிள்ளைதாய்

♦ இராமு + ♦ பொன்னம்மா

♦ பூரணம்

♦ வீரகத்தியர்

♦ சின்னப்

♦ கனகசபை

சின்னப்பிள்ளை பொன்னம்மா செல்வரத்தினம் சிவயோகம் குணசிங்க

பாஸ்கரன் + யோகமீரா
- பக்ஷிகா + துவாரகா + துளசிகா

சிறீதரன் + சாயினி
- மதுரா + மதுரன்


சுபாஸ்கரன் + மீரா
- கரிகரன் + திஷிகரன் + சுமித்

சிவநந்தினி + சிவ
- பாரணன் + கெவின் + சரணி

♦ அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்களும் ஆசிரியர்களும்

| | |
|---|---|
| அகத்தியம் | – அகத்தியர் |
| அபிராமி அந்தாதி | – அபிராமிப்பட்டர் |
| திருப்புகழ் | – அருணகிரிநாதர் |
| சிலப்பதிகாரம் | – இளங்கோவடிகள் |
| சீறாப்புராணம் | – உமறுப்புலவர் |
| தக்கயாகப்பரணி | – ஒட்டக்கூத்தர் |
| திருமுருகாற்றுப்படை | – அப்துல் மஜீதுப்புலவர் |
| குறிஞ்சிப்பாட்டு | – கபிலர் |
| இறையனார் காவியம் | – இறையனார் |
| நளவெண்பா | – புகழேந்திப் புலவர். |
| ஆத்திசூடி | – ஔவையார் |
| திருக்குறள் | – திருவள்ளுவர் |
| இராமாயணம் | – வான்மீகி |
| பெரியபுராணம் | – சேக்கிழார் |
| கந்தபுராணம் | – கச்சியப்ப சிவாச்சாரியார் |
| திருவிளையாடற் புராணம் | – பரஞ்சோதி முனிவர் |
| செகராஜசேகரம் | –அரசகேசரி |
| தொல்காப்பியம் | –தொல்காப்பியர் |
| அர்த்த சாஸ்திரம் | – கௌடில்யர் |
| சரசோதிமாலை | – போசராச பண்டிதர் |
| மகாவம்சம் | – மகாநாம தேரோ |
| யேசு காவியம் | – கண்ணதாசன் |
| சீவகசிந்தாமணி | –திருத்தக்கதேவர் |
| மணிமேகலை | – சீத்தலைச்சாத்தனார் |
| ஆசியஜோதி | – எட்வின் ஆனெல்ட் |
| திருவாசகம் | – திருவாதவூர் |
| கலிங்கத்துப்பரணி | – சயங்கொண்டார் |
| நைடதம் | – அதிவீரராம பாண்டியர் |
| சிவஞானபோதம் | – மெய்கண்டதேவர் |
| சாகுந்தலம் | – காளிதாசர் |
| மனோன்மணியம் | – மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| பகவத்கீதை | – வேதவியாசர் |
| மகாபாரதம் | – வேதவியாசகர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

" நன்றி மறப்பது நன்றன்று "

எனும் பொய்யா மொழிக்கு இணங்க ஆலங்கேணி, பூநகரி வாழ்ந்த எமது அன்னையாகிய திருமதி ஐயம்பிள்ளை சின்னப்பிள்ளை (பூபதி) அவர்கள் தமிழ் மார்கழித்திங்கள் 01.01.2017 ம் திகதியில் இறைவனடி சேர்ந்த நேரத்திலும் அன்னார் நோயுற்று இருந்த காலப்பகுதியிலும் அன்னாரை நலம் விசாரித்தும் இறைவனடி சேர்ந்த நாளில் உடன் அறிந்து உற்றதுயரில் பங்கு கொண்டும் ஆறுதல் தந்தும் அன்றைய தினம் 04.01.2017 அன்று நடந்தேறிய அந்திமக் கிரியைகளில் எம் துயரில் பங்கு கொண்டு ஆறுதல் தந்தோர்க்கும், மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உடனிருந்து உதவிப் பங்காற்றியவர்க்கும் மற்றும் தூர இடங்களிலிருந்து வந்து சமூகமளித்தோர்க்கும், பிறநாடுகளிலிருந்து உடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் அளித்தோர்க்கும் அருகிருந்து ஓடோடி வந்த அயலவர், உற்றார், நண்பர்கள் யாவருக்கும் தொலைவிலிருந்து வருகை தந்த கல்விமான்கள் ஆசிரியர்கள் உயர்அதிகாரிகள் இரங்கலுரை நிகழ்த்திய அன்பர்கள் நண்பர்கள் மற்றும் உற்ற நண்பர்கள் அறிமுக நண்பர்கள் யாவருக்கும் 29.01.2017 அன்று கீரிமலை புனித தீர்த்தத்தில் நடந்த அந்தியேட்டி மோட்ச கிரியைகளில் பங்கு கொண்டோருக்கும் 31.01.2017 அன்று வீட்டில் நடந்தேறிய சபிண்டீகரண மோட்ச தீப ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து மதிய போசனத்தில் பங்கு கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் கிரியைகளை நடாத்திய அந்தணப்பெரியார்க்கும் கண்ணீர் மலரஞ்சலி அச்சிட்டு வெளியிட்டுத் துயர் பகிர்ந்த அன்பு உள்ளங்களுக்கும் , நிறுவனங்களுக்கும் இம் மலரை ஆக்கித் தொகுத்தளித்த கலாபூஷணம் ஆங்கில ஆசிரியர் பொன் - தங்க ஜெகந்நாதன் அவர்கட்கும் இம் மலரை அழகுற அச்சிட்ட வேழன் அச்சகத்தாருக்கும் மனம் கனிந்த இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆலங்கேணி, பூநகரி
31.01.2017

**கணவருடன் ஆண் மக்கள்,**
**பெண்மக்கள், மருமக்கள், பேரர்,**
**பேத்தியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.



பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org